R 4915 (page 413)

# ஹா! ஆசிக்கிறேன்

## O! TO BE WILLING!

கீழ்ப்படிந்து தாழ்மையிலே அன்புடன் உம் சித்தம்செய்ய
ஆசிக்கிறேன்! ஆசிக்கிறேன்! உம்மிடமே ஜெபிக்கின்றேன்,
உதவிடும் எம் நேச இரட்சகரே! ஆண்டவரே!
என்னையே மகிழ்ச்சியான செய்தியாக ஆக்கிவிட
என்னையும் பயன்படுத்தும், நானே ஆசிக்கிறேன்
பசிதாகம் கொண்டுள்ள மானிடர்கள் யாவருமே
உம்முடைய இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டுமன்றோ!
ஆசிக்கிறேன்! ஆசிக்கிறேன்!
என்னை .பயன்படுத்த யாசிக்கிறேன்
நீரே என் கரம் பற்றி நடத்திச்செல்ல ஆசிக்கிறேன்
பாதம் ஒற்றி நடக்கவேண்டும், நீர்மட்டும் நடத்தும் என்னை
செய்திசொல்ல வாயிலிலே காத்திருக்கிறேன் இயேசுவே நான்,
ஆணையிடும், உம் ஆவி தந்து நிரப்பிவிடும்
என்னை முழுதும், சித்தம் செய்திடவும் செய்திசொல்ல
தயார்ப்படுத்தும்
அமைதியுடன் உம்மில் நான்
அமைதியாக காத்திருக்கிறேன் இன்னமுமே
என்னதான் கடினமான வேலை என்றபோதிலுமே
நீர் செய்தவண்ணம் செய்திடவே வழிகாட்டும் அன்புள்ளமே!
இப்பாருலகம் உம் ஆவி  அறிந்துகொள்ள ஆசிக்கிறேன்
ஆசிக்கிறேன் பூமி எல்லாம் யாவே புகழ் பாடவேண்டும்
பாருலக ஆஸ்திகளின் ஆசைதனை விட்டொழித்து
நீர் நியமித்த வழிதனிலே நடந்திடவும் ஆசிக்கிறேன்
மீட்புக்காக ஒவ்வொரு அடியையும்
உம்முடனே எடுத்துவைத்து
பாடிபட்டு மகா பரிசுத்தஸ்தலந்தனில் நிற்க ஆசிக்கிறேன்
மகிழ்வுடனே பலிசெலுத்தி ஆனந்த களிப்புடனே
உம் வழியில் யாம் செல்ல ஆசிக்கிறேன் ஆசிக்கிறேன்
என் விளக்கை சுத்தம்செய்து எண்ணெயினால் நிரப்பிவிட்டீர்
‘வா என் அன்பே! உன் பிரயாசம் விட்டொழித்து
சுதந்தரத்தில் பங்குகொள்வாய்!’
என்றே என் மணவாளன்
என்னை அழைக்கும் சத்தம் கேட்கும்! நானறிவேன்!

-Dr.ஆக்னஸ் ஹாவிலண்ட்

கொடுத்தார்; அவர் கூறினதாவது . . . சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்து, முளைத்தன் அது வளர்ந்தது; ஆனால் இறுதியில் உபத்திரவமாகிய எரியும் சூடு வந்தபோது, மென்மையான செடிகள் காய்ந்துபோயின. இராஜ்ய வகுப்பாரினுடைய அங்கத்தினர்களைத் தெரிந்துகொள்கையில், கர்த்தர் சகிப்பதற்குப் பொறுமையாய் இருக்கக்கூடிய ஆழமான நிலத்தை, ஆழமான குணலட்சணத்தை, ஆழமான இருதயத்தைத் தேடுகின்றார். எந்தவொரு தளத்திலுமுள்ள ஜீவிகளுக்கும், பொறுமையானது அவசியமான குணநலமாய் இருக்கின்றது; ஆனால் கிறிஸ்தவன் விஷயத்தில், அது ஓட்டத்தினுடைய துவக்கம் முதற்கொண்டு வளர்க்கப்படுவது விசேஷமாய் முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. அது நம்மோடு முதல் கால்-மைல் இலக்கில் காணப்பட வேண்டும் மற்றும் இரண்டாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் மூன்றாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் பரிசைப் பெற்றுத்தரும் இலக்காகிய - பூரண அன்பாகிய - நான்காம் கால்-மைல் இலக்கிலும் நம்மோடு காணப்பட வேண்டும்.

ஓட்டத்தினுடைய இந்த இலக்கை நாம் அடைகையில் - அதாவது நாம் நம்முடைய நண்பர்களை மாத்திரமல்லாமல், நம் சத்துருக்களைக்கூட அன்புகூரும் நிலையை அடைகையில் . . . அப்போதும்கூட நம் மீது வரத் தகுதியானது என்று கர்த்தர் கண்டு, அனுமதிக்கும் பரீட்சைகளை உண்மையோடும், சந்தோஷத்தோடும், பொறுமையோடும் சகித்து இலக்கில் காணப்பட வேண்டும் என்றும் நம்மில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதாய் இருக்கின்றது. தேவன் தம் ஜனங்களைச் சோதனைக்கு - நீண்டகால சோதனைக்கு - சிலசமயம் மாதக்கணக்கான மற்றும்

R4910 : page 409

வருடக்கணக்கான சோதனைகளுக்குக் கீழ்ப்படுத்துகின்றார்; 'உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3).

ஆகையால்தான் 'சகலத்தையும் செய்து முடித்து நில்லுங்கள்" - சகியுங்கள் என்றும், 'இலக்கை" அடைந்த பின்னர் . . . 'பொறுமையானது பூரண கிரியைச் செய்யக்கடவது" அல்லது 'பொறுமை அதன் கிரியையைப் பூரணப்படுத்தப்படக்கடவது" என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுறுத்துகின்றார். பரிசை அருளுவதற்கு ஓட்டத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதான குணலட்சணத்தை, அதாவது அன்பு எனும் தகுதிகளைத் தாங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை மாத்திரமல்லாமல், எதிர்ப்புகளை உங்களால் சந்தோஷமாய்ச் சகிக்க முடிகிற அளவுக்குத் தாங்கள் அன்பை ஸ்ரீ ஆழமாய் வேரூன்றப்பட்ட, அசைவுறாத குணநல அம்சமாய்ப் பெற்றிருக்கின்றீர்கள் என்பதையும்கூட உங்களது 'பொறுமையோடு சகித்திடும்" தன்மையானது நிரூபித்திடுவதாக.'நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:36) என்று பரிசுத்த பவுல் அடிகளார் நம்மிடம் கூறுகின்றார்.

---